


*Princes நெடுஞ்சாலை- Lonsdale தெருவை இணைக்கும் புதிய நிலக் கீழ் வீதி. ஓவியரின் அச்சுப்பதிப்பு , இது மாற்றத்திற்கு உட்பட்டது.*

TAMIL

**Webster தெரு, Dandenong,** ஆகஸ்ட் 2024

# Dandenongக்கான புதிய வீதி அமைத்தல்

LEVEL CROSSING REMOVAL PROJECT

**Webster தெருவிலுள்ள புகையிரதக் கடவையினை மூடுவதன் மூலம் அதிலுள்ள புகையிரதக் கடவையினை நாங்கள் அகற்றுகிறோம் மற்றும் புகையிரத பாதையின் கீழ் புதிய நிலக் கீழ் வீதியினை நிர்மாணித்து , Princes நெடுஞ்சாலை -Lonsdale தெருவை Cheltenham மற்றும் Hammond வீதிகளை இணைக்கிறோம்.**

புதிய நிலக் கீழ் வீதி Dandenongகின் CBD யிலிருந்து போக்குவரத்தை தொலை நகர்த்தி மாற்றியமைக்கும் மற்றும் Webster தெருவில் இருந்து கனரக வாகனங்களை நிறுத்தும்.

இந்த புகையிரதக் கடவையினை அகற்றுவது, சிறந்த இணைப்புகள் மற்றும் பயண நேரங்களுடன் நம்பகமான வீதி வலையமைப்பை வழங்கும்.

இது சாரதிகள், பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்கு பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, எதிர்காலத்தில் அப்பகுதியின் வளர்ச்சிக்கும் உதவும்.

இறுதி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டு இந்த ஆண்டின் இறுதியில் ஆரம்ப பணிகள் தொடங்கும்.

### 2025 இல் கட்டுமானம் தொடங்க வழி செய்யப்படுகின்றது

2025ல் புகையிரதக் கடவை இருக்கும் Webster தெருவை மூடுகிறோம். புதிய நிலக் கீழ் வீதி 2028ல் திறக்கப்படும்.

இந்த புகையிரதக் கடவையினை மூடுவதால் 2025 ஆம் ஆண்டில் புகையிரதக் கடவைத் தடை வாயில் இல்லாத Cranbourne -Pakenham புகையிரத பாதைகளை உருவாக்க உதவும், இது உள்ளூர்வாசிகள் எப்படி வாழ்கிறார்கள், வேலை செய்கிறார்கள் மற்றும் பயணம் செய்கிறார்கள் என்பதை மாற்றும்.

**இறுதி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டு இந்த ஆண்டின் இறுதியில் ஆரம்ப பணிகள் தொடங்கும்.**

### ஏன் இந்த புகையிரதக் கடவை அகற்றப்பட வேண்டும் ?

இந்த கடவை வழியாக தினமும் **10,000 ஆயிரம் வாகனங்கள்** வரை செல்கின்றன

புகையிரதக் கடவைத் தடை வாயில்கள் காலை உச்ச நேரத்தின் போது (காலை 7 மணி முதல் 9 மணி வரை) **62 நிமிடங்கள்** வரை மூடப்பட்டு இருக்கும்

2012ல் இருந்து **22 பேர் தவறிவிட்டனர்**

**புதுப்பிப்புகளுக்கு பதிவு செய்யவும்**
levelcrossings.vic.gov.au

VICTORIA'S BIG BUILD

# உங்களுக்கு எது முக்கியம்

**கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பரில், முக்கியமான உள்ளுணர்வுகளை, அதாவது அந்தப் பகுதியைச் சுற்றிப் பயணம் செய்வதில் உள்ள சவால்கள் மற்றும் வடிவமைப்புகள் கருத்து குறித்த பின்னூட்டல்களை பகிர்ந்து கொள்ளுமாறு உள்ளூர் மக்களைக் கேட்டிருந்தோம்.**

நிகழ்நிலை கருத்தாய்வுகள், சமூக தகவல் அமர்வுகள் மற்றும் எங்கள் ஊடாடும் வரைபடம் மூலம் 120க்கும் மேற்பட்ட பின்னூட்டங்களை பெற்றுள்ளோம்.

நெரிசலைக் குறைத்தல், பசுமையான இடங்களைப் பராமரித்தல் மற்றும் சிறந்த ஆற்றல்மிக்க போக்குவரத்து இணைப்புகள் ஆகியவை உங்கள் முதன்மையான முன்னுரிமைகள் என்று அறிந்து கொண்டோம்.

| | |
|---|---|
| **நெரிசலைக் குறைக்கும்** | போக்குவரத்து நிலைமைகளை மேம்படுத்தவும், அப்பகுதி வழியாக பயணங்களை எளிதாக்க கூடிய வடிவமைப்பை விரும்புவதாக நீங்கள் எங்களிடம் கூறியுள்ளீர்கள்.<br>புகையிரத கடவையிலிருந்து Princes நெடுஞ்சாலை - Lonsdale தெரு வரை தடைசெய்யப்பட்ட திருப்பங்கள் மற்றும் போக்குவரத்து நிர்வகிப்பை நோக்கமாகக் கொண்ட நடைமுறைகள் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துவதாக நீங்கள் பகிர்ந்துள்ளீர்கள். |
| **மரங்கள், தாவரங்கள் மற்றும் பசுமையான இடங்கள்** | திட்டத்தின் ஒரு பகுதியாக அதிக மரங்கள் மற்றும் பசுமை நடப்படுவதை உள்ளூர்வாசிகள் விரும்புகிறார்கள். பூர்வீக மற்றும் உள்நாட்டு இனங்களின் நடவுக்கான விருப்பம் தனித்து நின்றது.<br>தற்போதுள்ள மரங்கள் மற்றும் தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதும் சமூகத்திற்கு முக்கியமானது. |
| **சிறந்த நடைவழி மற்றும் துவிச்சக்கரவண்டி இணைப்புகள்** | அந்தப் பகுதி வழியாக பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்கான சிறந்த இணைப்புகளைப் பார்க்க விரும்புகிறீர்கள் என்று கேள்விப்பட்டோம்.<br>ஏற்கனவே உள்ள பாதைகளை உள்ளூர் கடைகள் மற்றும் Dandenong புகையிரத நிலையத்துடன் இணைப்பதன் மூலம் உள்ளூர் அணுகலை மேம்படுத்தலாம் என்றும் கேள்விப்பட்டோம். |

## மேலும் அறியவும்

உங்கள் பின்னூட்டல், தொழில்நுட்பத் தேவைகளுடன் ஒருங்கே இறுதி வடிவமைப்புகளை வடிவமைக்கும். இது இந்த ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்படும்.

ஆலோசனை அறிக்கையைப் படிக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது **levelcrossings.vic.gov.au/webster-street** ஐப் பார்வையிடவும்.




*Webster தெருவில் புகையிரதக் கடவைத் தடை வாயில்கள் மூடுதல்.*

# Dandenongகை இணைக்கும் புதிய நிலக் கீழ் வீதி

**புகையிரதக் கடவையினை மூடுவதன் மூலம் Webster தெருவிலுள்ள புகையிரதக் கடவைத் தடை வாயில்களை அகற்றி, Princes நெடுஞ்சாலை - Lonsdale தெருவை Cheltenham மற்றும் Hammond வீதிகளை இணைக்கும் புதிய நிலக் கீழ் வீதியினை நிர்மாணிக்கிறோம்.**

புகையிரத பாதையின் கீழ் அமையவுள்ள புதிய வீதி நெரிசலைக் குறைக்கும், மேலும் நம்பகமான சாலை வலையமைப்பை வழங்கும் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும்.

புதிய நிலக் கீழ் வீதி திறக்கும் போது, கனரக வாகனங்கள் Dandenong CBDயிலிருந்து விலகிச் செல்லும் மற்றும் Webster தெருவில் குறைவான கார்கள் பயணிக்கும்.

புதிய சமிக்கை பொருத்தப்பட்ட சந்திப்பு மூலம், புதிய நிலக் கீழ் வீதியை பயன்படுத்தும் ஓட்டுநர்கள் Princes நெடுஞ்சாலை-Lonsdale தெருவில் இடது மற்றும் வலதுபு றமாகத் திரும்ப முடியும்.

2025 ஆம் ஆண்டில் புகையிரத கடவையுள்ள Webster தெருவை நிரந்தரமாக மூடுகிறோம், அதாவது இனி வாகனங்கள் புகையிரத பாதையைக் கடக்க முடியாது. வாகனங்கள் Bryants வீதியில் திரும்பும், மேலும் கிழக்கு முடியும் பகுதியில் ஒரு புதிய வாகனத்தை திருப்பும் பகுதியினை நிர்மாணிப்போம்.

புதிய நிலக் கீழ் வீதி 2028ல் திறக்கப்படும்.

கட்டுமானத்தின் போது கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களுக்கும் மாற்றுப்பாதையை தீர்மானிக்க முக்கிய அரசு மற்றும் போக்குவரத்து அமைப்புகளுடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்.


அடுத்த ஆண்டு கட்டுமானம் தொடங்கும் முன் மாற்றுப்பாதைகள் பற்றிய கூடுதல் தகவல்கள் கிடைக்கும்.

திட்ட வடிவமைப்புகளைப் பார்த்து மேலும் தெரிந்துகொள்ளவும், **levelcrossings.vic.gov.au/webster-street**

***கீழே உள்ள வரைபடம்: புதிய நிலக் கீழ் வீதியின் வான்வழி காட்சி. ஓவியரின் அச்சுப்பதிப்பு , இது மாற்றத்திற்கு உட்பட்டது.***

## திட்டத்தின் அனுகூலங்கள்

- மேலதிக நம்பகமான வீதி வலையமைப்பு
- ஒரு பாதுகாப்பான மற்றும் அமைதியான Webster தெரு
- பாரவண்டிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்ல வைக்கிறது
- கட்டுமானத்தின் போது குறைவான புகையிரத சேவை தடங்கல்கள்



# வரவிருக்கும் ஆரம்ப பணிகள்

**செப்டெம்பர் முதல் டிசம்பர் வரை அந்த பகுதியில் மற்றும் நிலத்தின் அடியில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி அறிய ஆய்வுகளை நாங்கள் மேற்கொள்வோம்.**

இதில் நிலத்தை ஆய்வு செய்தல், வீதிகளின் நிலை, திட்டத்திற்கு அருகில் நிலத்தடி சேவைகளை கண்டறிந்து மதிப்பீடு செய்தல் ஆகியவை அடங்கும். இறுதி வடிவமைப்புகள் மற்றும் புதிய நிலக் கீழ் வீதியை எவ்வாறு நிர்மாணிப்பது என்பதை அறிவிக்க இந்தத் தகவலைப் பயன்படுத்துவோம்.

மேலதிக தகவலுக்கு, **levelcrossings.vic.gov.au/webster-street** ஐப் பார்வையிடவும்.

## நாங்கள் புகையிரத கடவை இல்லாத Pakenham பாதையினை அண்மிக்கிறோம்

நாங்கள் 19 புகையிரத கடவைகளை அகற்றிவிட்டோம், Pakenham பாதையில் உள்ள கடைசி மூன்று 2025 ஆம் ஆண்டிற்குள் அகற்றப்படும். மேலும் பெருநகரப் பாதையை கிழக்கு Pakenham வரை நீட்டித்து ஒன்பது புதிய நிலையங்களை உருவாக்குகிறோம்.

புகையிரத கடவையில்லாத Pakenham பாதையை உருவாக்குவது, உள்ளூர்வாசிகளின் வாழ்க்கை தரம், வேலை மற்றும்பயணம் போன்றவற்றை மாற்றும். புகையிரத கடவை இல்லாமல், பயணங்கள் வேகமாகவும், உள்ளூர் வீதிகள் பாதுகாப்பாகவும் இருக்கும்.

**bigbuild.vic.gov.au** இல் Pakenham பாதையில் நடக்கும் திட்டங்களைப் பற்றி அறியவும்

### மேலதிக தகவலுக்கு

மேலதிக தகவலுக்கு மற்றும் புத்தம் புதிய புதுப்பித்த தகவலை அறிந்து இருக்க, மின்னஞ்சல் புதுப்பிப்புகளுக்கு பதிவு செய்யவும், **levelcrossings.vic.gov.au/subscribe** இல் மற்றும் Cranbourne-Pakenham பாதையின் கீழ் **Webster Street, Dandenong** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**levelcrossings.vic.gov.au/webster-street** ஐப் பார்வையிடவும்

எப்போது வேண்டுமானாலும் **1800 105 105** ஐ அழைக்கவும் அல்லது **contact@levelcrossings.vic.gov.au** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

எங்கள் புகையிரத கடவை அகற்றுதல் திட்ட முகப்புத்தக பக்கத்தில் எங்களைப் பின்தொடரவும். நீங்கள் எங்களுக்கு ஒரு தனிப்பட்ட செய்தியை கூட அனுப்பலாம்.

புதிய புதுப்பித்த தகவலுக்கு பதிவு செய்ய, **WEBSTER என்று 0428 581 917** க்கு எண்ணுக்கு குறுஞ் செய்தி அனுப்பவும்.

*கீழே உள்ள படம்: Webster தெரு புகையிரத கடவையில் காத்திருக்கும் கார்கள்.*

## திட்ட காலவரிசை

**2018**

- புகையிரத கடவை அகற்றும் திட்டம் அறிவிக்கப்பட்டது

**2022 முதல் இறுதி 2023 வரை**

- தள ஆய்வுகள், போக்குவரத்து ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் பணிகள்

**நவம்பர் 2023**

- கருத்து திட்ட வடிவமைப்புகள் வெளியிடப்பட்டன
- சமூக ஆலோசனை
- தள ஆய்வுகளின் தொடர்ச்சி

**2024 இன் பிற்பகுதி**

- இறுதி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டது
- ஆரம்பகால பணிகள்

**2025**

- கட்டுமானம் தொடங்குகிறது
- நல்லதற்காக புகையிரத கடவை வாயில்கள் அகற்றப்பட்டுவிடும்

**2026-2028**

- கட்டுமானம்

**2028**

- புதிய நிலக் கீழ் வீதி

** காலவரிசை மாற்றத்திற்கு உட்பட்டது.*




**levelcrossings.vic.gov.au**

contact@levelcrossings.vic.gov.au

ஆங்கிலம் தவிர்ந்த மற்ற மொழிகளுக்கு, தயவு செய்து 9209 0147 என்ற எண்ணிற்கு அழைக்கவும்.

1800 105 105
(எப்போது வேண்டுமானாலும் அழைக்கவும்)

இந்த தகவலை அணுகக்கூடிய வடிவத்தில் நீங்கள் பெற விரும்பினால் எங்களை தொடர்பு கொள்ளவும். செவித்திறன் அல்லது பேச்சு குறைபாடு காரணமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், **relayservice.gov.au** ஐப் பார்வையிடவும்

VICTORIA State Government

NWP10611